சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **62/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | தமிழ்மாறன் |
| தந்தை பெயர் | : | பிச்சைமுத்து |
| கிராமம் | : | நன்னிலம் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | துணை காவல் கண்காணிப்பாளர் |
| வயது | : | 57 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

04.01.2025 அன்றே வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கினை எப்போது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்று

குறிப்பிட்டு இறுதியறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் ஆமாம் சொல்லவில்லை. எனது விசாரணையில் அ.சா.1 அபிக்கண்ணனுக்கு தலையில் வலது பக்கமா அல்லது இடது பக்கமா அடிப்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. அ.சா.2 சஞ்சய்-க்கும், அது போல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் நாள், நேரம், சம்பவ இடத்தில், 1ம் எதிரி ஹரிஹரன், 2ம் எதிரி சிவராம், 3ம் எதிரி சூர்யபிரகாஷ் ஆகியோரை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரிகளை 01.01.2025 முதல் 04.01.2025 ம் தேதி வரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்தில் வைத்திருந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் காவல் நிலைய புட்டேஜை பார்த்தால் தெரிய வரும் என்றால் தெரிய வரும். அரசு வாகனத்தில் சென்று எதிரிகளை கைது செய்தேன். நானும், ஓட்டுநர் மட்டும் சென்றோம். இறுதியறிக்கையில் நானும், ஓட்டுநரும் தான் எதிரிகளை கைது செய்ய சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் ஆமாம் குறிப்பிடவில்லை. பார்வை மகஜர், வரைபடம், கைப்பற்று மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், ஆகியவற்றை தயார் செய்ய என்னென்ன பொருட்களை எடுத்து சென்றீர்கள் என்றால் வெள்ளை நிற பேப்பர், கார்பன், பேனா ஆகியவற்றை எடுத்து சென்றோம். நானே கைப்பட எழுதினேன். நான் சொல்வதுபோன்று பார்வை மகஜர், வரைபடம், கைப்பற்று மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், ஆகியவற்றை தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதனை வழக்கிற்கு ஏற்றவாறு, பின்னர் காவல் நிலையத்தில் தயார் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் தடயப் பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில் ராகுல் என்பவரை விசாரித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவரை சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1

அபிக்கண்ணன், அ.சா.2 சஞ்சய், மேற்படி எதிரிகளுக்கு வகுப்பு சான்று பெறுவதற்கு வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் 10.01.2025 ம் தேதியன்று கொடுத்தேன். அ.சா.1 அபிக்கண்ணனுக்குரிய வகுப்பு சான்று என்று வாங்கினேன் என்றால் 11.02.2025 ம் தேதியன்று வாங்கினேன். அ.சா.1 அபிக்கண்ணனுக்குரிய வகுப்பு சான்று எந்த தேதியில் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் 31.01.2025 ம் தேதியன்று வழங்கப்பட்டுள்ளது. அ.சா.1 அபிக்கண்ணன், அ.சா.2 சஞ்சய், ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சித்ரா அவர்களை 11.01.2025 ஆம் தேதியன்று விசாரணை செய்தேன். எனது விசாரணையில் மருத்துவர் சித்ரா அவர்களிடம், வலங்கைமான் அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேட்டினை பதிவு செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை என்று சொன்னால் விசாரணை செய்தேன். அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு இல்லை. அரசாங்கத்திற்கு கீழ் இயங்கும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் விபத்து பதிவேடு இருக்கும் என சொன்னால் அந்த மருத்துவமனையில் இல்லை. அ.சா.10 மருத்துவர் ராஜகுமார் அவர்களை விசாரித்து என்ன காயச்சான்றிதழ் பெற்றேன் என்ற விபரத்தை குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எனது விசாரணையில் அ.சா.1 அபிக்கண்ணன் கும்பகோணம் தலைமை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேரும்போது மது அருந்தியிருந்தார் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தங்கள் விசாரணையில் அ.சா.1 இரு சக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ளார், அதுகுறித்து எனது விசாரணையில் அந்த இரு சக்கர வாகனத்தின் பதிவெண், நிறம், யாருக்கு உரிமையுடையது என்ற விபரங்கள் பற்றி கூறப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை. கடந்த 05.01.2025 ம் தேதியன்று அ.சா.1 அபிக்கண்ணன் அ.சா.2 சஞ்சய் அ.சா.3 சந்தோஷ் ஆகியோரை மறு வாக்குமூலம் பதிவு

செய்ததாக முன் விசாரணையில் கூறியுள்ளேன் என்றாலும் அந்த மறுவிசாரணையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.8 மற்றும் கிராம நிர்வாக அலுவலர் கற்பகவள்ளி, வருவாய் ஆய்வாளர் ஏஞ்சல், அ.சா.9 மருத்துவர் சித்ரா, அ.சா.10 மருத்துவர் ராஜ்குமார், ஆகியோரை எங்கு வைத்து விசாரணை செய்தீர்கள் என்றாலும், எந்த தேதி, எந்த நேரத்தில் விசாரணை செய்தேன் என்று குறிப்பிட்டு எனது முன் விசாரணையிலும், இறுதியறிக்கையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் என்பது பேருந்து நிலையத்தில் எதிரில் என குறிப்பிடவில்லை, அருகில் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பிச்சையம்மாள், சுதா, கார்த்தி, கணேசன், கொடி ஆகியோரை விசாரணை செய்து சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்று சொன்னால் ஆமாம், வீட்டில் யாரும் இல்லாததால் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடமே போகாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், எதிரிகளின் மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.05 17:49:58 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.